**இனிமையான குழந்தைகளே! தங்களுடைய உடல், மனம், பொருளால் தான் பாரதத்தை சொர்க்கமாக்கும் சேவையைச் செய்ய வேண்டும். இந்த பாரதத்தை மாயா என்ற இராவணனிடமிருந்து விடுவிக்க வேண்டும்.**

கேள்வி: ஆத்ம அபிமானியாக இருக்க முயற்சிக்கும் குழந்தைகள் எந்த கவலையிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள்?

பதில்: இந்த பழைய சரீரத்தின் கர்ம போகத்தால் (வினைப் பயனாக) அடிக்கடி தண்டனை அனுபவிக்கவும் கணக்கு வழக்கை முடிக்கவும் வேண்டியுள்ளது. எனவே குழந்தைகள் ஆத்ம-அபிமானியாவதற்கு முயற்சி செய்கின்றனர். அப்போது இவை பற்றிய கவலையிலிருந்து அவர் கள் விடுபடுகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய புத்தியில் தெளிவாக இருக்கிறது - இப்பொழுது நாம் பழைய கணக்கு வழக்கை நேர் செய்து கர்மாதீத் ஆகிட வேண்டும். பிறகு அரை கல்பத்திற்கு எந்தவிதமான வியாதியும் தம் அருகில் வரமுடியாது. எந்த வியாதி பற்றிய பெயரோ, அடையாளமோ இல்லாத அளவுக்கு பாபா முதல் தரமான நேச்சர் கியூர் (இயற்கை வைத்தியம்) செய்து விடுகின்றார்.

பாடல்: தாயும் நீயே... தந்தையும் நீயே.......

ஓம் சாந்தி குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். நாம் பதீத பாவனர் (பாவத்தை நீக்கி தூய்மை செய்யும்) தாய் தந்தைக்கு முன்னால் அமர்ந்திருக் கிறோம். அழுக்கடைந்த பாரதத்தை தூய்மை செய்வதற்காக ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக் கிறோம். ஏனென்றால், பரம்பிதா பரமாத்மாவின் சேவையில் குழந்தைகள் இருக்கின்றீர்கள். பாபாவும் இந்த சேவையில் ஈடுபட்டிருக்கின்றார். பாரதம் நிச்சயமாக தூய்மையாக இருந்தது என்பது குழந்தைகளுக்குத் தெரியும். இப்பொழுது அழுக்காகி விட்டது. தூய்மையுள்ள உலகமாக இருந்து 5000 ஆண்டுகளாகி விட்டன. உலகத்திற்கு இந்த விஷயம் கொஞ்சமும் தெரியாது. இப்பொழுது குழந்தைகள் தந்தையின் ஸ்ரீமத்படி நடந்து, உடல் மனம் பொருளால் பாரதத்திற்கு சேவை செய்கிறீர்கள். பாரதத்தை மாயா என்ற இராவணனின் விலங்கிலிருந்து விடுவித்து, இராம ராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். இதை நீங்கள் யாவருக்கும் புரிய வைக்க முடியும். நான் அழுக்கான பாரதத்தை தூய்மை செய்ய வந்திருக்கிறேன். ஆகவே கண்டிப்பாக தூய்மையாக வேண்டும். தூய்மையின் காரணமாகத் தான் சண்டை நடக்கிறது. ஏதேனும் கஷ்டம் உண்டாகிறது. அவர்களுடையது இம்சைதரும் போர். உங்கள் போர் இராவணன் என்ற 5 விகாரங்கள் மீதானது. கல்ப கல்பமாக நாம் ஸ்ரீமத்படி நடந்து வருகிறோம் என்பதையும் நீங்கள் அறிந்துள்ளீர்கள், இப்பொழுது முழு உலகமும் இராவணனுடைய வழிப்படி நடந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீமத் மூலம் நீங்கள் தெய்வீக வழியில் நடந்து தேவதை ஆகின்றீர்கள். இப்பொழுது நீங்கள் பிராமண குலத்தினர். நீங்கள் முழு உலகத்தையும் தூய்மை யில்லா நிலையிலிருந்து தூய்மையாக்குகின்றீர்கள். குழந்தைகளிடம் எல்லையற்ற தந்தை வந்திருக் கின்றார். குழந்தைகள் கூறுகின்றார்கள்: நாங்கள் உடல், மனம், செல்வத்தின் மூலம் பாரதத்தை மீண்டும் தெய்வீக இராஜ்யமாக (சொர்க்கமாக) மாற்றுகின்றோம். ஏனென்றால் பாரதம் சத்யுக ஆரம்பத்தில் இராஜஸ்தானாக இருந்தது. நாம் நமது தெய்வீக இராஜ்யத்தை அமைத்துக் கொண்டிருக்கிறோம்.

காங்கிரஸார் ஒன்றாக இணைந்து உதவினார்கள் (சுயராஜ்யத் திற்காக). பாபு காந்திஜி உடல், மனம், பொருள் மூலம் சேவை செய்தார். ஜெயிலுக்குப் போனார். அது உடலால் செய்யும் சேவை ஆகிறது இல்லையா? மனதையும் அதில் ஈடுபடுத்தினார். இப்பொழுது பாபா, மாயா என்ற இராவணனிடமிருந்து விடுவிக்கிறார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவர் எல்லையற்ற தந்தை. அவர் பாரதத்திற்கு தந்தை பாபுஜி (மகாத்மா காந்தி) இருந்தார். அனைவருக்கும் அவர் தந்தை கிடையாது. பொதுவாக வயதானவரை பாபுஜி என்கிறார்கள். மேயரும் நகரத்தந்தை என்று அழைக்கப்படுகிறார். தந்தைமார்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள். உங்களுடைய தந்தை ஒருவர் மட்டுமே. வேறு தந்தை கிடையாது. எல்லை யற்ற தந்தை ஒருவர் சிவபாபா. வேறு யாரும் இல்லை. அவர் பாரதத்தை தூய்மை செய்யும் சேவையில் ஆஜராகி இருக்கிறார். நிச்சயமாக யாரோ ஒருவர் சரீரத்தில் வந்திருக்க வேண்டும். அவருக்கு உதவியாளரும் இருக்க வேண்டும். தனியே செய்ய முடியாது. நீங்கள் சிவ சக்தி சேனை. நீங்கள் சகஜமாகப் புரிய வைக்க முடியும். காங்கிரஸாரும் எவ்வளவு சகித்துக் கொண்டார்கள்? அபலைகள் கூட ஜெயிலுக்குச் சென்றனர். அதிகமான துக்கத்தை ஆண்கள் அனுபவித்தனர். இப்பொழுது தாய்மார்கள் விஷத்தின் காரணத்தினால் அதிக துன்பத்தை சகித்துக் கொள்ள அவசியமாகிறது,

புது உலகத்தைப் படைப்பதற்காக பாபா வந்திருக்கிறார் என்பதை நீங்கள் புரிய வைக்க முடியும். அதற்கு முதன் முதலில் பிராமணர் வேண்டும். பிரம்மாவின் வாய் வழி வம்ச பிராமணர், பிறகு தெய்வீக அதாவது விஷ்ணுவின் வம்சாவளி ஆகிறீர்கள். இது புத்தியில் இருக்க வேண்டும். நிச்சயமாக நாம் பாபாவுக்கு உதவியாளர்கள். மத்படி ஆயிரம், லட்சக் கணக்கானோர் பின்பற்றி நடக்க வேண்டும். பாபுஜிக்கும் பெரிய சேனை இருந்தது. அவர்களில் கூட சிலர் பெரும் புகழ் வாய்ந்தவர்களாக இருந்தனர். சிலர் வேறு எப்படியோ இருந்தார்கள். அந்த பாபுஜி ஆங்கிலே யரிடமிருந்து விடுவித்தார். இப்பொழுது குழந்தைகளான உங்களுக்கு இராவணன் என்ற எதிரியிடமிருந்து விடுவிக்க ஸ்ரீமத் தந்து கொண்டிருக்கிறேன். நாங்கள் சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். அதுபோல, நாங்கள் ஸ்ரீமத்படி நடந்து, தெய்வீக சுயராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் புத்தியில் இருக்கிறது. ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் பெற வேண்டும். ஸ்ரீமத் மூலம் சிறந்தவர் ஆவீர்கள். ஒவ்வொரு வருக்கும் கர்மபந்தனம் தனித்தனியாக இருக்கிறது. கர்மாதீத் நிலையை அடைவதற்காக, கடைசி வரை முயற்சி செய்ய வேண்டியதிருக்கிறது. கர்மாதீத் நிலை இதுவரை அடைய வில்லை. அதற்கு நிறைய முயற்சி செய்ய வேண்டும். கர்மாதீத் நிலை என்றால் சரீரத்திற்குக் கூட எந்த துக்கமும் இருக்கக்கூடாது. பழைய சரீரத்திற்கு கடைசி வரை துக்கம் இருக்கவே செய்யும். எல்லோரும் சம்பூர்ணமடைந்து விட்டார்கள் என்பது கிடையாது. கர்ம தண்டனையை நேர் செய்ய வேண்டும். கர்மாதீத் நிலையை எய்தும் வரை மாயாவின் புயல், கர்மக் கணக்கின் தண்டனையை அனுபவித்தல், என்பவை நடைபெறும். அது பற்றி கவலைப்படக்கூடாது. பாபாவை நினைக்க வேண்டும். பாபா கூறுகிறார்: தேகி அபிமானிபவ: இப்போதைய இந்த வார்த்தையே புகழ்ந்து பாடப்படுகிறது.. மனிதருக்கு இதன் அர்த்தம் என்ன என்பது தெரியாது. இப்பொழுது உங்களுக்கு இது தெரியும் - ஆத்ம அபிமானி நிலையில் இருந்து, நாம் தனியாக பாபாவை நினைவு செய்ய முடிகிறது. இப்பொழுது ஆத்ம அபிமானியாக வேண்டும். இப்படி முயற்சி செய்ய வேண்டும்,

நான் ஆத்மாவாக இருக்கிறேன். பாபாவை நினைக்கிறேன். சர்வ வியாபி என்று சொன்னால் யாரை நாம் நினைவு செய்வது? பாபா புரிய வைத்திருக்கின்றார், சாந்திக்காக எங்கும் செல்லத் தேவையில்லை. காரியங்கள் செய்தே ஆக வேண்டும். அசரீரியாகி இருக்க வேண்டும். எப்படி? நாம் ஆத்மா, இவை நமது கர்மேந்திரியங்கள். ஆத்மாவின் சுய தர்மம் சாந்தி.

சன்னியாசி முதலியோர் ஹடயோகம் செய்கிறார்கள், பிரணாயாமம் செய்கிறார்கள், பிறகு பயிற்சி செய்து, ஆழமான குழிக்குள் இறங்கி அனேக வித முயற்சி செய்கிறார்கள். இங்கே ஹடயோகம் என்ற விஷயம் எதுவும் கிடையாது. ஞானம் மட்டும் புரிய வேண்டும். இறைத் தந்தையின் ஞானத்தை எவரும் அறிந்திருக்க வில்லை. அப்புறம் இறைத் தந்தை சர்வ வியாபி என்று கூறிவிடுகிறார்கள். இதற்குத் தான் மித்யா (கற்பனையான) ஞானம் என்று பெயர். இப்பொழுது நீங்கள் தந்தையை அறிந்திருக்கின்றீர்கள். அனைவருக்கும் தந்தை அவர் ஒருவரே. அவர் வந்து உலகத்தைத் தூய்மைபடுத்துகிறார். நீங்கள் பாபாவுக்கு துணையாக இருக்கிறீர்கள், தூய்மை இல்லாத நிலையிலிருந்து, தூய்மையடைந்து, பிறகு தூய்மையான உலகத்திற்குச் செல்வீர்கள். அங்கே தூய்மையான தேவதைகள் ஆட்சி செய்வார்கள். தூய்மையான உலகத் திற்குச் செல்ல நீங்கள் இராஜயோகம் கற்கின்றீர்கள். பிறகு நான் ஆசிரியராகி உங்களுக்கு சிருஷ்டி சக்கரத்தின் ஞானத்தைக் கூறுகிறேன். இதன் மூலம் நீங்கள் சுய தர்சன சக்கரதாரி யாகி சக்கரவர்த்தி இராஜா ராணி ஆகின்றீர்கள். இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு இந்த நிலமைக்கு (பதவிக்கு) வளர வேண்டும். நீங்கள் நிறைய சகித்துக் கொள்வது அவசியமாகிறது. அடியும் விழுகிறது. இந்த யக்ஞத்திற்கு அசுரர்களுடைய தடைகள் நிறைய வருகின்றன. அபலைகள் மீது கொடுமைகள் - விகாரத்தின் காரணத்திற்காக நடைபெறுகின்றன. காங்கிரஸார் அந்த ஜெயிலுக்குச் சென்றார்கள், நீங்கள் கம்சன், ஜராசந்த்களின் ஜெயிலில் அடைக்கப் பட்டுள்ளீர்கள். கொஞ்சம் சகித்துக் கொள்ள வேண்டும். தூய்மை அடைபவர்களில் மெஜாரிட்டி நீங்கள். சிலர் பலவீனமான கணவன் என்றால் மனைவியால் துன்பத்தை அனுபவிக்க நேரிடு கிறது. பாரதவாசிகளுக்கு 60 ஆண்டுகளுக்குப் பிறகு வானப் பிரஸ்த நிலையை தாரணை செய்ய வேண்டும் என்ற சட்டம் இருக்கிறது. பிறகு இல்லறத்தை விட்டு, சாவியை குழந்தை களிடம் நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்து விடுகின்றார்கள். உண்மையான குழந்தைகள் நல்லபடியாகக் கவனித்துக் கொள்கிறார்கள். தந்தை சேவை செய்து அவர்களைப் பெரியவர்களாக்கினார்கள். பிறகு கவனித்துக் கொள்வது குழந்தைகளுடைய கடமை. பிறகு கூறுவார்கள். நீங்கள் சத்சங்கம் முதலிய இடங்களுக்குச் செல்லுங்கள், நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். தற்காலத்தில் குழந்தைகளும் எதிரியாகி விட்டார்கள். உங்களுடைய போர் மாயா இராவணனுடன் நடக்கிறது. அவர்கள் காந்தியின் வழிப்படி நடந்து ஆங்கிலேயரிட மிருந்து விடுதலை வாங்கினார்கள். உங்கள் மீது இராவணன் 2500 ஆண்டாக ஆட்சி செய்தான். இந்த மாயை பெரிய பயில்வான். அவர்களுக்கு (பாரதத்தை) விடுவிக்க, 40, 50 ஆண்டு ஆனது. உழைப்பு தேவைப்பட்டது. இங்கும் நீங்கள் ஸ்ரீமத்படி நடந்து, வெற்றி பெறுகின்றீர்கள். இராவணன் உங்களுடைய பெரிய பழைய எதிரி. மாயா என்ற எதிரி உங்கள் மீது குண்டு வீசுகிறது. காமம் எல்லாவற்றையும் விட பெரிய குண்டு. மாயாவிடம் மிகவும் எச்சரிக்கை யுடனிருக்க வேண்டும். பாபா கூறுகிறார்: எவ்வளவு நினைக்கிறீர்களோ அவ்வளவு குஷி பாதரசம் போல்

ஏறும். நாம் ஈஸ்வரனுடைய குழந்தைகளாகி விட்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்ரீமத்படி 21 பிறவிக்காக நம் இராஜ்யத்தை அமைக்கிறோம். காங்கிரஸார் சுயராஜ்யத்தை கொஞ்ச காலத்திற்குப் பெற்றார்கள். அது உண்மையான சுயராஜ்யம் கிடையாது. மேலும் கூடுதல் துன்பம் வந்திருக்கிறது. கானல் நீர் மானுக்கு காட்சி தருவது போல சுயராஜ்யம் இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். காங்கிரஸ் எப்படி ஏற்பட்டது இது எந்த கீதையிலோ, பாகவதத்திலோ இல்லை. அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் எம்.பி. முதலியன ஆனார்கள். அதுவும் அற்ப நேர நீர்க் குமிழி போலத்தான் இருக்கிறது. இப்பொழுது எல்லோரும் துக்கமாக இருக்கிறார்கள். நாம் சொர்க்கத்தை அமைத்துக் கொண்டிருக்கிறோம். டிராமாவில் வெற்றி உங்களுக்கு தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. நீங்கள் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சூரிய வம்சத்தில் வருவீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பாபா கேட்கின்றார், நீங்கள் சூரிய வம்சத்தில் வருவதற்கு முயற்சி செய்கிறீர்களா? அல்லது சந்திர வம்சத்தில் வருவதற்கா? குழந்தைகள் கூறுகிறீர்கள்: சூரிய வம்சத்தில் வருவதற்காக முயற்சி செய்கிறோம். அம்மா, அப்பா என்று கூறுபவர்கள் கண்டிப்பாக சூரிய வம்சத்தில் வருவீர்கள். இதற்கு தாய் தந்தையைப் பின்பற்றுதல் என்று கூறப்படுகிறது. தாய் தந்தை இல்லையா? இவர்கள் சூரிய வம்சத்து மகாராஜா மாகாராணி ஆகின்றார்கள். இதில் எல்லோருக்கும் 100 சதவீதம் நம்பிக்கை இருக்கிறது. தாய் தந்தை குழந்தைகளுக்குக் கூறுகிறார்கள், நீங்களும் முயற்சி செய்து சிம்மாசனதாரி ஆகவும். முயற்சி செய்து அவர்களைப் பின்பற்ற வேண்டும்.

யாரேனும் சுபமான வார்த்தை பேசினால், நல்லது. உங்கள் வாயில் இனிப்பு என்று கூறப்படு கிறது. ஆமாம், சூரிய வம்சம் ஆவது என்பது, குறைந்த விஷயமா என்ன? எவ்வளவு தங்கம், வைரங்களால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை இருக்கும். எவ்வளவு உயர்ந்த பதவி. சிந்தித்தால் உடல் சிலிர்க்கும். பாபா நம்மை எவ்வளவு உயர்ந்தவராக்குகிறார். எமக்கோ (பிரம்மாவுக்கு) எதுவும் தெரியாதிருந்தது. கிராமத்து சிறுவன் என்ற மகிமையும் இருக்கிறதல்லவா? கிராமத்து சிறுவன் என்றால் கிருஷ்ணர் கிடையாது. இங்கே கிராமவாசிகள் நிறையபேர் வந்திருக்கிறீர்கள். ஏழைகளுக்காக ஏராளமாக பாக்கியம் இருக்கிறது. பணக்காரர்களுக்கு இதயம் துடிக்கும். பாபா கூறுகின்றார், நான் நிச்சயமாக ஏழைப்பங்காளன். பாருங்கள், யார் யார் வந்திருக்கிறீர்கள், ஆஸ்தி வாங்குவதற்கு. யாரேனும் சந்தித்தால் இப்படி கூறுங்கள், நாங்கள் பாரதத்தின் சேவையில் ஈடுபட்டிருக் கிறோம். உடல், மனம், பொருளால் பாரதத்தை சொர்க்கமாக்கும் சேவை செய்கிறோம். யாரேனும் வருமானவரி அதிகாரியாக இருந்தால் சட்டென்று மன்னித்து விடுவார். அந்த அரசாங்கத்தில் நிறைய பணம் வீணாகிறது. உங்கள் பணம் பாரதத்தை செழிப்பாக்குகிறது. எவ்வளவு வித்தியாசம்! யாருக்கேனும் புரிய வைத்தால் அவர்கள் ஆச்சரியமடைவர். ஆகா, இவர்கள் எவ்வளவு பெரிய சேவை செய்கிறார்கள் என்பார்கள். இப்படி சேவை செய்யுங்கள். மிக மிக இனிமை யானவர்களாகுங்கள். உண்மையான தந்தையிடம் உண்மையுடன் நடக்கவும். உண்மையான தந்தையை நினைக்கவும். உண்மையயான கண்டத்தின் எஜமான் ஆகிடவேண்டுமானால், உண்மையான தந்தையை நிரந்தரமாக நினைக்கப் பயிற்சி செய்யுங்கள். நினைத்து நினைத்து சுகம் அடையுங்கள். மனதில்

போராட்டம் இல்லாத மனிதர்களே கிடையாது. ஏதேனும் கொஞ்சம் வியாதி இருக்கும். அங்கே உங்களுக்கு இது போன்று கொஞ்சமும் இருக்காது. நீங்கள் ஒரு பொழுதும் நோயாளி ஆகாத அளவுக்கு பாபா அப்படி இயற்கை வைத்தியம் செய்து விடுகின்றார். 21 பிறவிக்கு நோயற்றவர் ஆகிவிடு கின்றீர்கள். அந்த அளவுக்கு போதையில் இருக்க வேண்டும். இந்த வித்தியாசத்தைக் கூறவும் - பாண்டவர், கௌரவர் என்ன ஏற்பாடு செய்தார்கள்? அந்த பாபுஜி என்ன செய்தார்? இந்த எல்லையற்ற பாபுஜி என்ன செய்கிறார்? பாபா, உங்களை இராவணனுடைய விலங்கிலிருந்து விடுவிக்கின்றார். இந்த தந்தையை நினைவு செய்தால் உங்கள் விகர்மம் வினாசம் ஆகும். அவர் தந்தையாகவும், டீச்சராகவும், சத்குருவாகவும் இருக்கிறார். பல பிறவிகளாகச் செய்த பாவம் தலைமீது இருக்கிறது. அதிலிருந்து தூய்மை பெறுவதற்கு வழி ஒன்று தான். நீரால் ஆன கங்கை யாரையும் தூய்மை செய்ய முடியாது. இந்த பாபாவின் நினைவு தான் தூய்மை செய்கிறது. நிஷ்டையில் அமர்வது வேண்டாம். உட்கார்ந்திருப்பது நல்லது தான். ஒருவர் இன்னொருவருடைய பயத்தால் அமர்ந்திருப்பார். ஆனால் பாபா கூறுகின்றார்: நடமாடும் பொழுதும், வேலை செய்யும் பொழுதும் நினைவு செய்ய வேண்டும். அந்த பள்ளி கூடத்தில் டீச்சர் கற்றுக் கொடுக்கிறார்: அப்பொழுது மாணவன் கண்டிப்பாக டீச்சரை நினைவு செய்ய தேவைப்படுகிறது. அது போல குழந்தைகளான உங்களுக்கு புத்தியில், நமக்கு பாபா கற்றுத் தருகின்றார் என்று பதிந்திருக்க வேண்டும். தந்தை, டீச்சர், இவர்களை நினைக்காதவர் எவரு மில்லை. நாம் இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே சத்குருவையும் நினைக்க வேண்டும். அற்புதமான விஷயங்களை நீங்கள் கூறுகின்றீர் கள். நம் பாபா, டீச்சர், சத்குரு - அதாவது சத்திய பாபா, சத்திய டீச்சர், சத்திய குரு. சத்தியத்தின் சம்மந்தம், விடுதலை செய்விக்கிறது. அதாவது முக்தி, ஜீவன் முக்தியில் அழைத்துச் செல்கிறது. இந்த பழைய உலகத்திலிருந்து அனைவரும் திரும்பிச் சென்று விடுவார்கள். பிறகு வந்து புது உலகத்தில் ஆட்சி செய்வார்கள். உங்களுக்கு இது ஓட்டப்பந்தயம், எல்லையில்லா குதிரை ஓட்டப் பந்தயம். எல்லோரும் சொல்கிறீர்கள், நான் முதலில் செல்வேன், அப்படி என்றால் நினைவு செய்ய வேண்டும். மாணவர்களை ஓட்டப் பந்தயத்தில் ஓடச் செய்கிறார்கள். நீங்கள் எவ்வளவு முயற்சி செய்வீர்களோ, அவ்வளவு வெற்றி மாலையில் சேர்ந்து வருவீர்கள்.

தாய் தந்தை பாப்தாதாவின் இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு உள்ளம், உயிர், இனிமை, அன்பு நிறைந்த அன்பான நினைவும் அன்பும் உரித்தாகுக. நீங்கள் மிக மிக அன்புக்குரியவர் கள். நாமே பூஜைக்குரிய தேவி தேவதையாக இருந்தோம். பிறகு நாம் பூஜைக்குரியவராக இரண்டு கலை குறைவாக சத்திரிய, சந்திர வம்சத்தில் வந்தோம். பிறகு நாம் பூஜாரியாகி வைஸ்ய வம்சத்திலும், சூத்திர வம்சத்திலும் வந்தோம். இப்பொழுது மீண்டும் நாம் பூஜாரியிலிருந்து பூஜிக்கத் தக்கவராகிக் கொண்டிருக்கிறோம், ஸ்ரீமத்படி. இந்த சக்கரத்தைப் புத்தியில் சுற்ற வேண்டும். நல்லது. ஆன்மீகக் குழந்தைகளுக்கு வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாரதத்தை செழிப்பாக்க தன்னுடைய உடல், மனம், செல்வம் அனைத்தும் பயன் படுத்த வேண்டும்.மிக மிக இனிமையானவர்களாகி சேவை செய்யவும்.

உண்மையான கண்டத்தை ஸ்தாபனை செய்வதற்காக உண்மையுடன் இருக்கவும்.

2. வெற்றி மாலையில் வருவதற்கு நினைவு என்ற ஓட்டப்பந்தயம் ஓடவும். நடமாடும் பொழுதும், வேலை செய்யும் பொழுதும் தந்தை, டீச்சர், சத்குருவை நினைக்கவும்.

வரதானம் : தியாகம் மற்றும் தவத்தினுடைய சகயோகத்தினால் சேவையில் வெற்றி அடையக்கூடிய நிரந்தர தபஸ்வி மூர்த்தி ஆகுக.

சேவாதாரி என்றால் தியாகம் மற்றும் தபஸ்வி மூர்த்தி. தியாகம் மற்றும் தவம் ஆகிய இரண்டின் சகயோகத்தினால் வெற்றி கிடைக்கிறது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது தான் தபஸ்யா. இந்த நிரந்தரமான தவம் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் உங்களுடைய சேவைத் தளம் தபஸ்யாகுண்டம் ஆகிவிடும். அப்பேற்பட்ட தபஸ்யா குண்டம் ஆக்கினீர்கள் என்றால் விட்டில்பூச்சிகள் தானாகவே வருவார்கள். மனதின் மூலம் செய்யும் சேவையினால் சக்திசாலி ஆத்மாக்கள் பிரத்யட்சம் ஆகுவார்கள். இப்பொழுது மனதின் மூலம் பூமியை மாற்றுங்கள் - விருத்தி செய்வதற்கான விதி இதுவே ஆகும்.

சுலோகன்: பணிவு மற்றும் பொறுமை சக்தியினால் கோப அக்னியை சாந்தமாக்குங்கள்.